அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 27/2001

எனது இல:11/309ஈ95/22
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள்,உள்ளூராட்சி,
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2001.10.29

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்
திணைக்களத்தலைவர்களுக்கும்
அரச கூட்டுத்தாபனங்களுக்கும்,
நியதிச் சட்டசபைகளின் தலைவர்களுக்கும்

**அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவைகளில் தற்காலிக, அமய, பதிலீட்டு,ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்த ஊழியர்களை நிரந்தரப்படுத்துதல்.**

அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவைகளில் தற்காலிக, அமய, பதிலீட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சகல ஊழியர்களும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்வார்களாயின் 2001 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து சேவையில் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது.

1. 2001 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியன்று 180 நாட்களுக்கு குறையாது தொடர்ச்சியான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
111. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் இருக்க வேண்டும்

02, இதன் கீழ் நிரந்தரப்படுத்துவதற்கு தகைமைகளை கொண்டுள்ள ஊழியர்கள் 2001.10.01 ஆந் திகதி 45 வயதை கடந்திருந்தாலும் அவர்கள் பதிலீட்டு ,அமய ,தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் 45 வயதை கடந்து செல்லாதிருப்பின் அவர்களை சேவையில் நிரந்தரப்படுத்தலாம்.

03. மேற்குறிப்பிட்டுள்ள தீர்மானத்தின்படி தாமதிக்காது உரிய நடவடிக்கை எடுக்கவும்

04. இவ்விடயத்தின் பொருட்டு வெளியிடப்பட்டுள்ள 26/2001 இலக்க 2001.10.19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இரத்துச் செய்யப்படுகிறது

05. பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்:யூ.ஜீ.ஜயசிங்க
பதிற் கடமையாற்றும் செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள்,உள்ளூராட்சி,
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு